காணொலிக் காட்சி வாயிலாக - இன்று

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **"தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்"** இன்று (17-07-2025 வியாழக்கிழமை) காலை 10.00 மணி அளவில், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: "**ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை**"

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை -600 018
நாள்- 16 - 07- 2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

காஞ்சிபுரம் கீழ்கதிர்பூரிலுள்ள தனியார் பள்ளியில், நேற்று (16-7-2025) பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு2025 ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. வெ. வெற்றிச்செல்வி, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் பா.தமிழ்ச்செல்வி, காஞ்சிபுரம் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) முனைவர் அ.நளினி ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி

ஜூலை 18 தமிழ்நாடு நாள் விழா! : சென்னையில் நடைபெறுகிறது!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் - போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்!

சென்னை, ஜூலை 17-

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.10.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு நாளை (18.07.2025 வெள்ளிக்கிழமை), சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடப் படவுள்ளது.

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என முதலமைச்சர் அவர்களால் 31.10.2021ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு தொடர்ந்து கொண்டாடப் பட்டு வருகிறது.

அதன்படி இவ்வாண்டு தமிழ்நாடு நாள் விழா 18.07.2025 அன்று சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், முன்னிலையுரையும் ஆற்றுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து மரு.ஜெ. இராஜமூர்த்தி தலைமையில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. "பேரறிஞர் அண்ணாவும் தமிழும்" என்ற தலைப்பில் வழக்கறிஞர் த. இராமலிங்கம் "இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி "இமய நெற்றியில் எழுதுக தமிழ்நாடு" என்ற தலைப்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தா "தமிழ்நாடு என்றால் தனியின்பம் தானே" என்ற தலைப்பில் திருமதி ரேகா மணி கருத்துரையாற்றுகின்றனர்.

திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அமைச்சர் மு.பெ சாமிநாதன் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் மா. அப்ரின் என்ற மாணவிக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திருப்பத்தூர் மாவட்டம் கி.க. ஜெயஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.30,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம் இ. மேகதர்ஷினி என்ற மாணவிக்கு ரூ.20,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் பெ. ஜீவகனி என்ற மாணவனுக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திண்டுக்கல் மாவட்டம் இர. முத்து மீனாட்சி என்ற மாணவிக்கு ரூ.30,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற திருநெல்வேலி மாவட்டம் ல. ஹரிஹர சுதன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கியும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி கு.ப. சத்தியபிரியா நன்றி கூறுகிறார்.

ஆயிரம்விளக்கு கலைஞர் நூலகத்தில் மாணவர் வாசகர் சந்திப்பு!

சென்னை, ஜூலை 17 -

சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாளை யொட்டி, கழக இளைஞர் அணி செயலாளர் நேற்று துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், கலைஞர் நூலக மாணவர் வாசகர் சந்திப்பு, வட்ட வாரியாக நடைபெற்று வருகிறது. இதன் தொடர்ச்சியாக 15.07. 2025 அன்று 112 (அ) வட்டத்திற்கான மாணவர் வாசகர் சந்திப்பு, சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பாக நடைபெற்றது.

கழக இளம் பேச்சாளர் அ.தா.டெக்சின் ரொமேரியோ இந்நிகழ்வில் கலந்து கொண்டு, திராவிட இயக்கத் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரை மாணவர்கள் வாசித்து, தமிழ் நாட்டின் சமூகநீதி வரலாற்றை தெரிந்துகொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியின் நிறைவில், வருகை தந்த மாணவர்களுக்கு முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் வெளியீடான கலைஞர் இயக்கவியல் புத்தகம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ், ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம், வட்ட செயலாளர் மு.மோகன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜே.எம்.எச்.இம்ரான், என். மோகன்வேல், பகுதி அமைப்பாளர் வ.வேல்குமார், பகுதித் துணை அமைப்பாளர்கள் ஆர்.ராஜேஷ்(எ) காந்தி, சி.தனுஷ்கோடி ஆகியோர் கலந்துகொண்டனர்.

"உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம்!

நெய்வேலியில் சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் !

நெய்வேலி, ஜூலை 17-

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட வடக்குத்து ஊராட்சியில், முதலமைச்சரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் 2025 ஜூலை 15 அன்று சிதம்பரத்தில் தொடங்கி வைத்த "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம், தமிழகம் முழுவதும் 10,000 இடங்களில் நடைபெறவுள்ளதன் ஒரு பகுதியாக, வடக்குத்து ஊராட்சியில் பஞ்சாயத்து அலுவலகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி, நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.ராஜேந்திரன் அவர்களின் தலைமையில், உதவி இயக்குனர் (ஊராட்சி) தி. அ.ஷபானா அஞ்சும் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த முகாமில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட 15 அரசுத் துறைகளின் கீழ் உள்ள 46 சேவைகளுக்காக பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் என சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் அறிவுறுத்தினார். பெறப் பட்ட மனுக்களின் கோரிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டு, 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் (BDO) K. வெங்கடேசன், குறிஞ்சிப்பாடி தாசில்தார் விஜய் ஆனந்த், வட்டார வளர்ச்சி அலுவலர் ஜி.ராமச்சந்திரன், குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குணசேகரன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜவேல், ஒன்றிய அவைத் தலைவர் வீர.ராமச்சந்திரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் சடையப்பன், பிச்சையா, வாகித், மாவட்ட பிரதிநிதி இராம வெங்கடேசன், ஏழுமலை, கோபு, ஆனந்தன், மணிகண்டன், கோவிந்தன், கல்யாண சுந்தரம், கோபால், சந்திரமோகன், மணிவண்ணன், ராஜசேகரன், சந்தானம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

செஞ்சி பேரூராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 17-

விழுப்புரம் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முதற்கட்டமாக 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை நகர்ப்புற பகுதிகளில் 21 முகாம்களும், ஊரகப் பகுதிகளில் 81 முகாம்கள் உட்பட 102 முகாம்கள் நடைபெற உள்ளது. நகர்புற பகுதிகளில் 13 அரசு துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளை சேர்ந்த 46 சேவைகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்சிதம்பரத்தில் இன்று முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனரும்,கண்காணிப்பு அலுவலர் குமாரி ஆனந்தி தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜய குமார், மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன் வல்லம் அமுத ரவிக்குமார் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்ஆகியோர் முன்னிலை வகித்தனர். செஞ்சி வட்டாட்சியர் துரைமுருகன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.தொடர்ந்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சியில் முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான்பேசுகையில் பொதுமக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின்அவர்கள்சிதம்பரத்தில் இன்று தொடங்கி வைத்துள்ளார்.

இதைத் தொடர்ந்துஊரக மற்றும் நகரபகுதிகளில் இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது இதன் தொடர்ச்சியாக ஊரகப் பகுதிகளில் உள்ள மக்கள் பயன் பெறும் வகையில்

இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.

அந்த வகையில்ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 15 அரசுத்துறைகள் சார்ந்த 44 சேவைகள் மீது தீர்வு காணும் பொருட்டு இம்முகாம்கள் நடத்தப்படுகிறது.

இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின் கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்து முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 45 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் எனமுன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், மணிமாறன், யமாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பேரூராட்சிகளின் செயற் பொறியாளர் ராதாகிருஷ்ணன், டிஎஸ்பி பிரபாகரன் ,விழுப்புரம் மாவட்டம் மின் சாரத் துறைமேற்பார்வை பொறியாளர் நாகராஜ் குமார், செயற்பொறியாளர்சி வசங்கரன்,தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சுகந்தி,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர்,செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் , ராஜ லட்சுமி செயல் மணி, அனைத்து துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
124	மே.பொ / இ - I / வ.செ.அ.மி.நி - 1	Unit II Removal damaged insulation in boiler down comer pipe line relaying insulation during 25 26
93	மே.பொ / கொ&தி / வ.செ.அ.மி.நி - 2	Procurement of Vacuum Pump rotating assembly and its spares
94	மே.பொ / கொ&தி / வ.செ.அ.மி.நி - 2	Supply of various types of CPVC UPVC pipes fittings of ECP
97	மே.பொ / கொ&தி / வ.செ.அ.மி.நி - 2	Supply of high pressure tubes for front RH coil tubes for 600W Boiler
104	மே.பொ / கொ&தி / வ.செ.அ.மி.நி - 2	Supply of Shaft Mounting Gear box Assembly for TWS
02	த.பொ / வ.செ.அ.மி.நி.நி - III	NCTPP-III-STORES-RECEIPT OF MANDATORY SPARES UNLDG COUNTING AND STACKED IN SEPARATE STORE ETC
03	த.பொ / வ.செ.அ.மி.நி.நி - III	Sweeping mopping and maintenance of floor area and toilets in Service Building of NCTPP3 for 1 year
04	த.பொ / வ.செ.அ.மி.நி.நி - III	Sweeping mopping and maintenance of floor area toilets in Powerhouse Building of NCTPP3 for 1 year
08	த.பொ / வ.செ.அ.மி.நி.நி - III	Sweeping mopping in BOP areas of PTP GIS its roads and drains maintenance of NCTPP3 for 1 year
134	மே.பொ / கொ&தி / வ.செ.அ.மி.நி - 1	SA 106 Gr C 150 NB Seamless pipe for Fire Hydrant line

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/3667/ஒப்பந்தப்புள்ளி/2025

முரசொலி அலுவலக

முன்னாள் உதவியாளர் சி.எஸ்.செல்வம் மறைவு!

இன்று காலை அயன்புரத்தில் உடல் அடக்கம்!

சென்னை, ஜூலை 17-

சென்னை அயன்புரத்தைச் சார்ந்த - முரசொலி அலுவலக முன்னாள் உதவியாளர் சி.எஸ்.செல்வம் (வயது 58) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

முரசொலி அலுவலகத்தில் உதவியாளராக பல ஆண்டுகளாக பணிபுரிந்த சி.எஸ். செல்வம் (வயது 58) நேற்று (16 - 7 - 2025) மதியம் இரண்டு மணி அளவில் அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரது உடல் இன்று (17.7.2025) காலை 10 மணி அளவில் எண். 146. என். எம்.கே. சாலை அயனாவரம் எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு வேலங்காடு இடுகாட்டில் தகனம் செய்யப்படுகிறது.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் நீர்வளத் துறை சார்பில் இலட்சுமிபுரம் அணைக்கட்டு முதல் ஆண்டார்மடம் தடுப்பணை வரை ஆரணியாற்றின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் ஆற்றுப்படுகையை மறுசீரமைக்கும் பணியினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பணியினை தொடங்கி வைத்து பார்வையிட்டார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் மு. பிரதாப், அலுவலர்கள் க.கார்த்தியேன், ஜி.டி.விஜயராகவன், செந்தில் குமார். கு.ரவிகுமார், பொன்னேரி நகர்மன்றத் தலைவர் பரிமாள விஸ்வநாதன், எல்லாபுரம் பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், பா.செ. குணசேகரன், ஜி.ரவிக்குமார், கி.வே.ஆனந்த்குமார், மு.முரளிதரன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி, சாலவாக்கம் அடுத்த புலிப்பாக்கம் ஊராட்சியில் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு திட்டத்தின் மூலம் ரூபாய் 32 லட்சம் மதிப்பில் இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கட்டிடங்கள் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. புதிய பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டில் பள்ளி குழந்தைகள் மற்றும் கிராம மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.சாலவாக்கம் திமுக ஒன்றிய செயலாளர் டி.குமார், ஒன்றிய குழு துணைப் பெருந்தலைவர் வசந்தி குமார், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், நிர்வாகிகள் பாண்டியன், விஷ்ணு, பலராமன், கண்ணப்பன் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.